பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 04 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடியும், இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகவும் இணைந்து இலங்கையின் அனுராதபுரத்தில் முக்கிய ரயில்வே திட்டங்களை இன்று தொடங்கி வைக்கின்றனர்.

2. வக்ஃப் சட்டத் திருத்த மசோதாவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

3. கடந்த 11 ஆண்டுகளில் கடற்படை நவீனமயமாக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4. ஆயுஷ்மான் பாரத் உள்ளிட்ட திட்டங்களால் மக்களின் மருத்துவ செலவுகள் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவின் ஹிதேஷ் தங்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இலங்கையில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காலை அனுராதபுரம் செல்கிறார்.

அங்கு பிரதமரும், இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகவும் இணைந்து முக்கிய ரயில்வே திட்டங்களை தொடங்கி வைக்கின்றனர்.

இந்தியாவின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டங்கள், இலங்கையின் வடபகுதிக்கும், அந்நாட்டின் தலைநகர் கொழும்புவுக்கும் இடையிலான போக்குவரத்தை எளிதாக்கும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள ஜெயஸ்ரீ மஹாபோதி பௌத்த ஆலயத்திலும் பிரதமர் வழிபாடு மேற்கொள்கிறார்.

நேற்று மாலை இலங்கையில் உள்ள இந்திய அமைதிப் படையினருக்கான நினைவுத்தூணில் அவர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்காகவும், சமாதானத்திற்காகவும் பணியாற்றி உயிர்த்தியாகம் செய்த இந்திய அமைதிப்படை வீரர்களை நினைவுகூறுவதாக சமூக வலைதளத்தில் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

தமது இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இன்று பிற்பகல் தமிழகத்தின் மண்டபம் வந்தடைகிறார்.

ராமேஸ்வரத்தில் பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

வக்ஃப் சட்டத் திருத்த மசோதாவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

வக்ஃப் சொத்துகளின் முறையான நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் இந்த மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்தது.

இது மக்களவையில் கடந்த 3ஆம் தேதியும், மாநிலங்களவையில் 4ஆம் தேதியும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

தற்போது குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ளதன் மூலம் இந்த மசோதா, சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

<<<<>>>>

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஜம்மு-கஷ்மீர் செல்கிறார்.

பாதுகாப்பு நிலைமை குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

அமர்நாத் யாத்திரைக்கான ஏற்பாடுகள் குறித்தும் அவர் ஆய்வு செய்ய உள்ளார்.

பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

மூன்று நாள் பயணமாக ஜம்முகஷ்மீர் செல்லும் திரு. அமித் ஷா, பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்திலும் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கடந்த 11 ஆண்டுகளில் கடற்படை நவீனமயமாக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

கர்நாடகாவின் கார்வாரில் ஐ.என்.எஸ். சுனைனா கப்பலின் ரோந்து நடவடிக்கைகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

கடற்படை தளபதிகள் மாநாட்டையும் அவர் தொடங்கி வைத்தார்.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

ஆயுதப்படைகளின் தேவைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு நிறைவேற்றி வருவதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டு பாதுகாப்புத்துறை சீர்திருத்தங்களுக்கான ஆண்டாக கடைபிடிக்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

கொள்கை அளவிலும், நிர்வாக ரீதியாகவும் சீர்திருத்தங்கள் அவசியம் என்று அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் சீர்திருத்தங்களை நடைமுறைக்கு கொண்டுவர ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் உள்ளிட்ட திட்டங்களால் மக்களின் மருத்துவ செலவுகள் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

தில்லியில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தேசிய சுகாதார ஆணையத்திற்கும், தில்லி அரசுக்கும் இடையே நேற்று கையெழுத்தானது.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ஏற்கனவே 34 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்கள் இத்திட்டத்தை செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது தில்லியும் இணைந்துள்ளது முக்கியத்துவம் வாய்ந்தது என அவர் கூறினார்.

50 கோடி மக்களை உள்ளடக்கிய மிகப்பெரிய சுகாதார திட்டமாக இது திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

தில்லியில் இத்திட்டத்தின் மூலம் 30 லட்சம் பேர் பயனடைவார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

2014ஆம் ஆண்டுக்கு முன்பு மருத்துவ செலவுகளில் 62 சதவீதம் மக்களின் சொந்த செலவாக இருந்தது என அவர் தெரிவித்தார்.

தற்போது மக்களின் சொந்த செலவு, 38 சதவீதமாக குறைந்துள்ளது என்று திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, மத்திய அரசின் 5 லட்ச ரூபாய் காப்பீட்டுடன் தில்லி அரசு கூடுதலாக 5 லட்சம் ரூபாய் காப்பீட்டுப் பலன்களை வழங்கும் என்று தெரிவித்தார்.

தில்லியில் ஆயுஷ்மான் பாரத் அட்டை வினியோகம் வரும் 10ஆம் தேதி தொடங்கும் என்றும் திருமதி ரேகா குப்தா கூறினார்.

<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க 10 ஆயிரம் கோடி ரூபாய் தொகுப்புடன் கூடிய இரண்டாவது நிதியத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

தில்லியில் 3 நாட்கள் நடைபெற்ற புத்தொழில் திருவிழாவின் நிறைவு நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் புத்தொழில்களில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகத் தெரிவித்தார்.

சிறிய புத்தொழில் நிறுவனங்களுக்க கடனுதவிகளை அதிகரிக்குமாறு சிறுதொழில் வளர்ச்சி வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

ராமநவமி இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி நாடு முழுவதும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது.

அயோத்தியில் ராமர் ஆலயத்தில் வழிபாட்டு நேரத்தை நீட்டிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அயோத்தியில் 2 லட்சம் தீபங்கள் ஏற்றப்படும் என உத்தரப்பிரதேச அரசு கூறியுள்ளது.

ராமநவமியை ஒட்டி நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஸ்ரீராமரின் நெறிகளான உண்மை, தருமம் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தியாகம், தன்னலமற்ற அன்பு, மனித குல சேவை ஆகியவற்றை பின்பற்ற ராமநவமி, மக்களை ஊக்குவிப்பதாக திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வேளாண் புத்தொழில் நிறுவனங்கள் பாரம்பரியத்துடன் புதுமையை ஊக்குவிக்க வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற இயற்கை விவசாயம் தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறினார்.

சி.எஸ்.ஐ.ஆர். போன்ற நிறுவனங்களால் உருவாக்கப்படும் புதுமைக் கண்டுபிடிப்புகள், விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ரசாயன உர பயன்பாட்டைக் குறைத்து இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்த அரசு ஊக்கமளித்து வருவதாக திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

அரசின் கொள்கைகளை சிறப்பாக வடிவமைக்க துல்லியமான புள்ளி விவர தகவல்கள் அவசியம் என மத்திய புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜித் சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களின் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சிறந்த நிர்வாகம் அவசியம் என்றும், இதற்கு புள்ளியியல் துறையின் பங்கு முக்கியமானது எனவும் அவர் கூறினார்.

தேசிய புள்ளியியல் நடைமுறைகளை வலுப்படுத்த மாநில அரசுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று திரு. ராவ் இந்தர்ஜித் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பிஜேபி கட்சி தொடங்கப்பட்டதன் 45வது ஆண்டு தினத்தை அக்கட்சி இன்று கொண்டாடுகிறது.

இதனையொட்டி தலைநகர் தில்லியிலும் நாடு முழுவதும் கட்சியின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு. அனில் பலூனி தெரிவித்துள்ளார்.

தலைநகர் தில்லியில் பிஜேபி தலைமையகத்தில் கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா கட்சிக் கொடியை ஏற்றி வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இதுவரை இத்திட்டத்தில் 54 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலகக்கோப்பை குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவின் ஹிதேஷ் தங்கம் வென்றார்.

பிரேசிலில் நடைபெற்ற இப்போட்டியின் 70 கிலோ எடைபிரிவு இறுதியாட்டத்தில் இங்கிலாந்து வீரர் **Odel Kamara** காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து ஹிதேஷ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

<<<<>>>>

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் இஷா சிங் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சண்டிகரில் நடைபெற்ற பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 50 ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The end>>>>**